
என் தோசைய தர்றியா? இல்ல, பானைய தர்றியா?
ஐயோ ! இந்தா… என் பானைய வச்சுக்கோ.
தோட்டக்காரரே தண்ணி எடுத்து ஊத்த, இந்த பானைய வச்சுக்கோ…
ஐயோ ! என் பானை உடைஞ்சு போச்சே !
என் பானைய தர்றியா? இல்ல, பூ தர்றியா?
இந்தா … பூ தர்றேன், கொண்டுபோ
இந்தா.. பெண்ணே ! பூ வச்சுக்கோ, அழகா இருக்கும்.
ஆகா ! என் பூ வாடி உதிர்ந்து போச்சே







ஓணான் அந்த மேளத்தை அடித்தவாறே பாட ஆரம்பித்தது.




**நீதிக் கருத்து:**

**துன்பம் வரும் வேளையில் மனம் சோர்வு அடையக்கூடாது.**



## வாங்க பேசலாம்

- 'டும்..டும்.. டும்..டும்.' படக்கதையை உமது சொந்த நடையில் கூறுக.
- வாரஇதழ்களில் வரும் படக்கதையைப் படித்த அனுபவம் உண்டா? ஆம் எனில், அக்கதையைப் பற்றி கூறுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. விறகெல்லாம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) விறகு + எல்லாம் (ஆ) விறகு + கெல்லாம்

(இ) விற + கெல்லாம் (ஈ) விறகு + எலாம்

2. 'படம் + கதை' – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) படம்கதை (ஆ) படக்கதை

(இ) படகதை (ஈ) படகாதை

3.  – இப்படத்திற்கு உரிய சொல்லைக் கண்டறிக. ....................

(அ) ஓனான் (ஆ) ஓநான்

(இ) ஓணான் (ஈ) ஓணன்

5. தோசை– இச்சொல்லின் ஒலிப்புடன் தொடர்பில்லாத சொல் எது? ..................................

(அ) இசை (ஆ) திசை

(இ) கல் (ஈ) பசை

### வினாக்களுக்கு விடையளி

1. ஓணான் எதற்காக மருவத்துவரிடம் சென்றது?
2. தோட்டக்காரன் ஓணானிடம் என்ன கூறினான்?
3. கதையில் ஓணான் பெற்று வந்த பொருள்களைக் கூறுக.
4. படக்கதையிலிருந்து நீ அறிந்து கொண்ட கருத்து யாது?

WNU7ZI

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.





ஊர்கூடி என்னை இழுத்தால்தான்
நான் அசைந்து வருவேன்– நான் யார்?

இடிஇடிக்கும்; மின்னல் அடிக்கும்;
மழை பெய்யாது. – அது என்ன?





நிழல் தருவேன் காய் தருவேன்
பழம் தருவேன். –நான் யார்?

'கலை' என்ற சொல்லில் முதல் எழுத்து
'படம்' என்ற சொல்லில் இடை எழுத்து
'மடல்' என்ற சொல்லில் இறுதி எழுத்து– நான் யார்?

## சொல் விளையாட்டு

ஒரு சொல்லில் உள்ள ஏதாவது ஓர் எழுத்தைக்கொண்டு, புதிய சொற்களை உருவாக்கி மகிழ்க.

பா த ம் → தங் க ம் → க த வு → தலை வ ர் →

இதே போன்று ஒட்டகம், குருவி, சிங்கம், கவிதை போன்ற சொற்களைத் தொடக்கமாக வைத்துச் சொற்களை உருவாக்குக.

## அறிந்து கொள்வோம்

உலக கதைசொல்லல் நாள் – மார்ச் 20

# 15 எழில் கொஞ்சும் அருவி

(அங்கவை, சங்கவை இருவரும் சித்தப்பா, சித்தி வீட்டிற்குச் செல்கிறார்கள்)



BAAKT2

**சித்தி** வாருங்கள், செல்லங்களே! வீட்டில் எல்லாரும் நலமா?

**அங்கவை**

**சங்கவை** நலமாய் உள்ளோம் சித்தி, நீங்கள் நலமா?

**சித்தப்பா** நீங்கள் இருவரும் கல்வி சுற்றுலா சென்று வந்தீர்களாமே. அதைப் பற்றிக் கூறுங்கள் கேட்போம்.

**அங்கவை** நாங்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்குப் போய் வந்தோம். அதைப் பற்றிக் கூறுகிறேன். கேளுங்கள்.

**சங்கவை** எழில் கொஞ்சும் மலையில் உள்ள அந்த அருவி, பென்னாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 16 கி.மீ. தூரத்தில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1500 அடி உயரத்தில் உள்ளது.

**சித்தப்பா** மலையின் உச்சியிலிருந்து வெள்ளியை உருக்கி ஊற்றியது போல பேரிரைச்சலுடன் கீழ் நோக்கி விழும் அருவி பார்க்க பார்க்க அழகு, இல்லையா?

அங்கவை	ஆம் சித்தப்பா அழகோ, அழகு

சித்தப்பா	அதற்கு ஒகேனக்கல் என்ற பெயர் எப்படி வந்ததாம்? தெரிந்து கொண்டீர்களா?



அங்கவை	ஒகேனக்கல் என்பதற்குப் புகைப்பாறை எனப்பொருள். கன்னடத்தில் ஒகே என்பது புகை ஆகும். அருவிநீர் பாறையில் பட்டுத் தெறித்து, வெண்புகை போலத் தோற்றம் அளிக்கும். அதனால் தான் இப்பெயர் வந்தது.

சங்கவை	உல்லாசப் பயணிகளைப் பெரும் ஆரவாரத்தோடு வரவேற்கும் நீர்வீழ்ச்சியில் தண்ணீர் கொட்டும் காட்சி அற்புதமாக இருக்கும்.

சித்தி	இவ்விடத்திற்கு எதன் மூலம் பயணம் செய்தீர்கள்?

சங்கவை	இந்தக் கண்கொள்ளாக் காட்சியினை கண்டுகளிக்க பரிசலில் சென்றோம். என்னே அருமை! 100 அடி உயரத்திலிருந்து விழும் அருவியில் குளித்தது மகிழ்ச்சியாக இருந்தது.

சித்தப்பா	பரிசலில் செல்லும் வழியில் என்னென்ன பார்த்தீர்கள்?

அங்கவை	மலை நடுவே பாதையமைத்து அருவி நீர் ஓடும் காட்சி வெண்ணெய் உருகுவது போல தெரிந்தது. இந்தப் பரிசலில் பயணம் சென்றது எங்களை ஆனந்தக் களிப்பில் ஆழ்த்தியது.



சங்கவை	இரு மலைகளுக்கு இடையே தொங்குபாலத்தில் சென்றோம். அங்கு 'ஞானதீர்த்தம்' என்றழைக்கப்படும் இடத்தில் எளிதாக நீராடலாம்.

அங்கவை	நாங்கள் எல்லாரும் நீராடி விட்டு, மீண்டும் பரிசலில் கரைக்கு வந்தோம். உணவு உண்டபின், மகிழ்ச்சியோடு மான்பூங்கா சென்றோம். துள்ளித்திரியும் மான் கூட்டம், முதலைப் பண்ணை முதலியவற்றைப் பார்த்தோம்.

**சங்கவை** சித்தி, இங்கே மிகப் பழைமையான தேசநாதீஸ்வரர் கோவில் உள்ளது. இது அதியமான் காலத்தைச் சேர்ந்தது என்பதைக் கல்வெட்டைப் படித்து, அறிந்து கொண்டோம்.

**சித்தப்பா** பாராட்டுகள், குழந்தைகளே! அருவியின் அழகை கண்டுகளித்தது மட்டுமின்றி, அங்குள்ள பொதுஅறிவுச் செய்திகளையும் திரட்டியிருக்கிறீர்கள்.

**சித்தி** நன்றி குழந்தைகளே! எங்களுக்கும் ஒகேனக்கலை நேரே சென்று பார்த்த பரவசத்தை உண்டாக்கி விட்டீர்கள்! நாமும் குடும்பத்துடன் ஒருமுறை சென்று வருவோம்.



## வாங்க பேசலாம்

- நீ வசிக்கும் பகுதியில் அல்லது மாவட்டத்தில் ஏதேனும் சுற்றுலாத்தலம் சென்று வந்துள்ளாயா? உமது அனுபவத்தை வகுப்பில் பகிர்ந்துகொள்க.
- உமக்குத் தெரிந்த புகழ்பெற்ற இடம் பற்றி அறிந்தவற்றைக் கூறுக. வகுப்பறையில் கலந்துரையாடுக.



# படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. ஒகேனக்கல் அருவியில் நீர் வீழ்வது ................................ உருக்கி ஊற்றுவது போல் இருந்தது.

(அ) தங்கத்தை (ஆ) வெள்ளியை
(இ) இரும்பை (ஈ) கற்பாறையை

2. 'ஒகேனக்கல்' என்ற சொல்லின் பொருள் ................................

(அ) பவளப்பாறை (ஆ) வழுக்குப்பாறை
(இ) பனிப்பாறை (ஈ) புகைப்பாறை

PVQYLK

3. 'வெண்புகை' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................................

(அ) வெண் + புகை (ஆ) வெ + புகை
(இ) வெண்மை + புகை (ஈ) வெம்மை + புகை

4. பாதை + அமைத்து – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது. ................................

(அ) பாதைஅமைத்து (ஆ) பாதையமைத்து

(இ) பாதம்அமைத்து (ஈ) பாதயமைத்து

5. தோற்றம் – இச்சொல்லின் எதிர்ச் சொல் ....................................

(அ) தொடக்கம் (ஆ) மறைவு

(இ) முதல் (ஈ) ஆரம்பம்

## வினாக்களுக்கு விடையளி

1. ஒகேனக்கல் பகுதியில் நாம் பார்க்க வேண்டிய இடங்களைக் கூறுக.
2. ஒகேனக்கலில் அருவியில் நீர் விழும் காட்சி, பார்ப்பதற்கு எப்படி இருந்தது?
3. சங்கவை பார்த்த மிகப்பழைமையான கோவிலின் பெயர் என்ன?
4. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி எங்கே அமைந்துள்ளது?

## சரியான தொடரை ✓ எனவும் தவறான தொடரை X எனவும் குறியிடுக.

1. ஒகேனக்கல் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. [ ]
2. அருவியிலிருந்து விழும் நீர், பாறையில் பட்டு வெண்புகைப் போல தோன்றும் [ ]
3. கடல் மட்டத்திலிருந்து ஒகேனக்கல் 1500 அடி உயரத்தில் உள்ளது [ ]

## அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக

1. எழில் – ____________
2. களிப்பில் – ___________
3. நீராடலாம் – ___________
4. பரவசம் – ___________

## பொருத்தமான சொல்லால் நிரப்புக.

1. கடற்கரையில் ____________ ( மனல்/மணல்) வீடு கட்டி விளையாடலாம்.

2. மரத்தில் பழங்கள்____________ (குரைவாக/குறைவாக) உள்ளன.

3. வலப்பக்க சுவற்றின் மேல் ____________ (பல்லி/பள்ளி) இருக்கிறது.

4. ஆதிரைக்கு நல்ல____________(வேலை/வேளை) கிடைத்துள்ளது.

## படங்களை இணைத்துச் சொற்களைக் கண்டுபிடிப்போமா?



தேன்



நீர்

தேநீர்



__________



__________

__________



__________



__________

__________



__________



__________

__________

## உன்னை அறிந்துகொள்.

தமிழ்நாட்டில் கோடை வாழிடமாகவும் சுற்றுலாத்தலமாகவும் விளங்கும் ஊட்டி (உதகமண்டலம்) 'மலைகளின் அரசி' என அழைக்கப்படுகிறது. இது, நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

## சிந்திக்கலாமா?





படங்களை உற்றுநோக்கித் தூய்மையான காற்று எங்கே கிடைக்கிறது.? உன் கருத்துகளை வெளிப்படுத்துக.

# இன எழுத்துகள்

குழந்தைகளே! நண்பர்களோடு சேர்ந்திருப்பது உங்களுக்கு மிகவும் பிடிக்கும்தானே! உங்களைப்போலத்தான் சில எழுத்துகளும் ஒன்றாகவே இருக்க விரும்புகின்றன. அவற்றை இனஎழுத்துகள் என அழைக்கின்றனர்.

உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் அன்பாகப் பேசுவது, ஒரே மாதிரியாக ஆடை அணிவது என்று சில பண்புகள் பொதுவாக இருப்பதைப் போல, இனஎழுத்துகளும் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு, வடிவம் முதலியவற்றில் ஒத்துப்போகின்றன. சரி, எந்த எழுத்து எந்த எழுத்துக்கு இனமாக வரும்? தெரிந்து கொள்வோமா?

## உயிரெழுத்துகள்

உயிரெழுத்துகள் பன்னிரண்டு அல்லவா! அவற்றை உயிர்க்குறில், உயிர்நெடில் எனப் பிரித்துப் படித்திருப்பீர்கள். ஆகையால், உயிர்க்குறில் எழுத்துகளுக்கு உயிர்நெடில் எழுத்துகள் இனமாக வரும். எப்படி?

அ – ஆ | இ – ஈ | உ – ஊ | எ – ஏ | ஐ – ? | ஒ – ஓ | ஔ – ?

என்ன இது? ஐ என்ற எழுத்துக்கும் ஔ என்ற எழுத்துக்கும் இன எழுத்து எங்கே? கண்டுபிடிக்கலாமா? ஐ – இந்த எழுத்தை நன்றாக ஒலித்துப் பாருங்கள். இறுதியில் என்ன ஓசையில் முடிகிறது? இ தானே. அதுபோல, ஔ என்னும் எழுத்தையும் ஒலித்துப் பாருங்கள். எந்த எழுத்தின் ஓசையில் முடிகிறது? உ என்னும் எழுத்தின் ஓசையல்லவா! இப்போது எழுதிப் பார்க்கலாமா?

ஐ – இ | ஔ – உ

## மெய்யெழுத்துகள்

மெய்யெழுத்துகளை நாம் ஏற்கெனவே பெயரிட்டு அழைத்தோமே, நினைவிருக்கிறதா? என்ன அது? வல்லினம், மெல்லினம், இடையினம்.

வல்லின எழுத்துகளுக்கு மெல்லின எழுத்துகள்தாம் இனமாக வரும். கீழே இருப்பதைப் பாருங்கள்.

க் – ங் | ச் – ஞ் | ட் – ண் | த் – ந் | ப் – ம் | ற் – ன்

ய், ர், ல், வ், ழ், ள், இவை ஆறு எழுத்துகளும் இடையினம். இவற்றிற்கு இன எழுத்துகள் இல்லை. ஓர் எழுத்திற்கு அருகில் அதே எழுத்து வந்தாலும் அவை இன எழுத்துகள் அல்ல (பக்கம், அச்சம்…)

இன எழுத்துகள் சேர்ந்தே வருவதைக் கண்டுபிடிக்கலாம் வாருங்கள். கீழே உள்ள படங்களைப் பார்த்து, அவற்றின் பெயர்களைச் சொல்லி, எழுதிப் பாருங்கள்.



சங்கு மஞ்சள் பந்து வண்டு பம்பரம் கன்று

**உங்கள் நண்பர்களின் பெயர்களிலுள்ள இன எழுத்துகளைக் கண்டுபிடியுங்கள்**

மங்கை, கங்கா, இராமலிங்கம், மஞ்சுளா, அஞ்சலி, காஞ்சனா, அஞ்சனா, பாண்டியன், தண்டபாணி, காந்தி, சாந்தி, ஜெயந்தி, கந்தன், நந்தா, நந்தினி, வந்தனா, அம்பிகா, அம்பு, இளமாறன், மணிமாறன்

**விடுபட்ட இடங்களில் சரியான இனஎழுத்துகளை நிரப்பலாமா?**



செ – – ருத்தி கு – – சு – – ல் தொ – – பாலம் இ – – ஆ – –



**செயல் திட்டம்**

உங்கள் வீட்டில் நீங்கள் காணும் பொருள்களுள் இன எழுத்துகள் இடம்பெற்ற சொற்கள் 20 எழுதி வருக.

# 16 நாயும், ஓநாயும்

**திறன் :** **முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக்குறியீடுகளை அறிந்து படித்தல்**

பசியால் வாடி மெலிந்த ஓநாய், தின்பதற்கு ஏதாவது அகப்படுமா? என்று தேடிக் காடு முழுவதும் சுற்றித் திரிந்தது. அப்போது கொழுகொழு என்றிருந்த ஒரு நாய், மகிழ்ச்சியுடன் எதிரே ஓடி வருவதைப் பார்த்தது.

அந்த நாயைத் தின்று விடலாமா என்று ஓநாய் நினைத்தது. ஆனால், தான் அப்போது இருந்த சோர்வான நிலையில் அந்த நாயுடன் சண்டை போட்டுத் தோற்கடிக்க முடியுமா? என்பது சந்தேகமாய் இருந்தது. அதனால் அதனுடன் நட்பாய்ப் பேச ஆரம்பித்தது.

ஓநாய்   நண்பா, நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய்!

நாய்   நண்பனே, மிக்க மகிழ்ச்சி. நான் சொல்கிறபடி செய்தால் நீயும் என்னைப்போலக் கொழுகொழு என்று அழகாய் இருக்கலாம். நீ இந்தக் காட்டில் இருந்து பசியும் பட்டினியுமாக ஏன் துன்பப்படுகிறாய், என்னுடன் வெளியே வந்து விடு நல்ல உணவு கிடைக்கும்.



ஓநாய் அப்படியானால், நான் என்ன வேலை செய்ய வேண்டும்?

நாய் "வேலையாவது கீலையாவது : ஒன்றுமே கிடையாது. வீட்டுக்கு வருகிற

அறிமுகம் இல்லாத புதியவர்களை விரட்டியடிக்க வேண்டும். வீட்டுக்காரர்களைப் பார்த்தால் வாலை ஆட்ட வேண்டும். அவ்வளவு தான், அதற்குப் பதிலாக விதவிதமான உணவுகள் கிடைக்கும். நமது தலையை வீட்டுக்காரர்கள் அன்பாக வருடிக் கொடுப்பார்கள். அது, ஆகா! என்ன சுகம் தெரியுமா?

ஓநாய் ஓ! அப்படியா! அவ்வளவு சுகமான வாழ்க்கையா! தயவு செய்து என்னையும் அழைத்துச் செல், நண்பா.

நாய் வா நண்பா! என்னுடன் உன்னை அழைத்துச் செல்கிறேன் இன்றிலிருந்து உனக்கு நல்லகாலம்தான்.

ஓநாய் இதோ இப்போதே புறப்படுகிறேன். அது சரி, அது என்ன உன் கழுத்தில் ஒரு கருப்புப் பட்டை தொங்குகிறதே!

நாய் அது ஒன்றுமில்லை, வா.

ஓநாய் "ஒன்றுமில்லை என்றால், கழுத்தில் எப்படி பட்டை வந்தது?"

நாய் "என்னைச் சங்கிலியால் கட்டிப் போடுவதற்கு வசதியாகக் கழுத்தில் போடப்பட்ட பட்டை அவ்வளவு தான்

ஓநாய் என்ன, கட்டிப் போடுகிறார்களா! அப்படியானால், உன் விருப்பப்படி எப்பொழுது வேண்டுமானாலும் வெளியே போக முடியாதா?

நாய் ஊ... கும், எப்பொழுதும் நம் விருப்பம்போல போக முடியாது. அதிலென்ன பிரமாதம் ?"

ஓநாய் "என்ன பிரமாதமா?" அதுதான் எனக்கு பெரிய காரியம். எப்படிப்பட்ட வாழ்க்கையாய் இருந்தாலும் சரி, என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன். வீட்டில் மாட்டிக் கொண்டு விதவிதமான உணவுகளைச் சாப்பிடுவதைவிடச் சுதந்திரமாகக் காட்டில் அலைவதே மேல், நான் போகிறேன்.



## வாங்க பேசலாம்

- ஓநாயும், நாயும் கதையை உம் சொந்த நடையில் கூறுக.
- முகமூடி அணிந்து நடித்துக் காட்டுக.



## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. மகிழ்ச்சி– இச்சொல் உணர்த்தும் பொருள் ........................................

(அ) இன்பம் (ஆ) துன்பம்
(இ) வருத்தம் (ஈ) அன்பு

2. ஒன்றுமில்லை – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................

(அ) ஒன்று + இல்லை (ஆ) ஒன்றும் + இல்லை
(இ) ஒன்றுமே + இல்லை (ஈ) ஒன்று + மில்லை

3. அப்படி+ ஆனால் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ...................................

(அ) அப்படியானால் (ஆ) அப்படியனால்
(இ) அப்படியினால் (ஈ) அப்படிஆனால்

F48M11

4. விருப்பு என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................................

(அ) வெறுப்பு (ஆ) கருப்பு
(இ) சிரிப்பு (ஈ) நடிப்பு

### வினாக்களுக்கு விடையளி

1. பசியால் மெலிந்த ஓநாய் எங்குச் சுற்றித் திரிந்தது?
2. நாய், ஓநாயை எங்கு வரச் சொன்னது?
3. நாயின் கழுத்தில் என்ன இருந்தது?

### அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக

1. விதவிதமான – __________
2. சுதந்திரம் – ___________
3. வருடுதல் – ___________
4. பிரமாதம் – ___________
5. சந்தேகம் – ___________

## சரியான தொடரை ✓ எனவும் தவறான தொடரை X எனவும் குறியிடுக.

1. ஓநாய் தின்பதற்கு எதுவும் கிடைக்காமல் மெலிந்திருந்தது.
2. நாய் புதியவர்களைக் கண்டால் விரட்டியடிக்காது
3. ஓநாயின் கழுத்தில் கருப்புப் பட்டை இருந்தது.
4. ஓநாய் சுதந்திரமாக வாழ ஆசைப்படவில்லை
5. ஓநாயை நாய் வீட்டிற்கு அழைத்தது.

## சரியான சொல்லால் நிரப்புக




1. நீ எவ்வளவு ________________ இருக்கிறாய்?
2. நாயின் கழுத்தில் ______________ இருந்தது.
3. வீட்டுக்காரர்கள் நாயை ________________ வருடிக்கொடுப்பார்கள்
4. வீட்டில் மாட்டிக்கொள்வதைவிட _______________ காட்டில் அலைவதே மேல்.
5. என்னைத் தயவுசெய்து அழைத்துச் செல் என்று ________________ கூறியது.

## சொல்லக்கேட்டு எழுதுவோம்

1. நல்ல உணவு கிடைக்கும்
2. கழுத்தில் பட்டை எப்படி வந்தது?
3. நாய் மகிழ்ச்சியாய் ஓடிவந்தது.
4. ஆகா! என்ன சுகம் தெரியுமா!

## சொற்களை இணைத்து எழுதுவோம்







1. ______________________
2. ______________________
3. ______________________


1. ______________________
2. ______________________
3. ______________________


## உன்னை அறிந்துகொள்

நாம் பொருள் உணர்ந்து படிப்பதற்கு நிறுத்தக்குறிகள் உதவுகின்றன.

| | |
|---|---|
| ? – வினாக்குறி | : – முக்காற்புள்ளி |
| , – காற்புள்ளி | . – முற்றுப்புள்ளி |
| ; – அரைப்புள்ளி | ! – வியப்புக்குறி |

# சொல் விளையாட்டு



டி ட

பு ல் ம்

ரு


க


ர

வி க

த ங்

ம் க லை





ப ம்

ட் ழ

வை டு ற

ச த ள

ம் த்

கு ள் ந்

ட ம

## சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரை உருவாக்குக.

எ.கா. சுதந்திரத்தை கொடுக்க என் மாட்டேன் விட்டு

என் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டேன்

1. கொழு, கொழு அழகையும் புகழ்ந்தது நாயின் உடம்பையும்.
2. பார்த்தால் வீட்டுக்காரர்களைப் ஆட்ட வாலை வேண்டும்.

## பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

எ.கா. நான் என்ன வேலை செய்ய வேண்டும்


நான் என்ன வேலை செய்ய வேண்டும் ?

1. ஆகா என்ன சுகம் தெரியுமா
2. ஒன்றுமில்லை என்றால் கழுத்தில் எப்படி பட்டை ஏற்பட்டது
3. என்ன கட்டிப் போடுகிறார்களா
4. நம் விருப்பம் போல போக முடியாது அது என்ன பிரமாதம்.
5. நல்ல உணவு உனக்கும் கிடைக்கும் என்று சொன்னது

## விளையாடலாம், வாங்க!

**சொன்னால் செய்வேன்!**

குழந்தைகளை வட்டமாக ஓடவிட வேண்டும். ஆசிரியர் நடுவில் நிற்க வேண்டும். ஆசிரியர் ஒரு பாடலைப் பாட வேண்டும். ஆசிரியர் பாடுவதை நிறுத்தியவுடன் எல்லாக் குழந்தைகளும் அப்படியே நிற்க வேண்டும். உடனே ஆசிரியர் ஒரு விலங்கின் பெயரைச் சொல்ல, அந்த விலங்கு போல ஒலி எழுப்ப வேண்டும். எ.கா. பசு– என மா, மா என ஒலி எழுப்புதல், இவ்வாறு வேறு வேறு விலங்குகள் பெயர் சொல்லலாம். இவ்விளையாட்டில் அனைத்துக் குழந்தைகளையும் பங்கேற்கச் செய்தல் வேண்டும்..




எந்தக் கிளி மகிழ்ச்சியாக இருக்கும்? ஏன்?








## செயல் திட்டம்

பல்வேறு விலங்குகள், பறவைகள் படங்களைத் திரட்டுக. அவற்றைத் தொகுப்பேட்டில் ஒட்டி, அவை எழுப்பும் ஒலிகளின் பெயர்களை எழுதி வருக.

# 17 அன்பை மறவா முயல்

புதிர்க்கதை

அடர்ந்த காட்டில் முயலும் மானும் நெடுநாள் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. இரண்டு விலங்குகளும் அன்பாய்ப் பழகி வந்தன. மான் பார்ப்பதற்கு அழகாக இருந்ததால் எப்படியாவது வேட்டையாடி விடவேண்டும் என்ற எண்ணம் அங்குள்ள நரிக்குத் தோன்றியது. நரி ஒரு நாள் மானிடம் "நண்பனே! நீ உன் நண்பன் முயல்மீது அளவுக்கு மீறிய பாசம் வைத்துள்ளாய்! என்பதை நான் அறிவேன். ஆனால் முயலோ, உன்னைவிட நான்தான் அழகு என்று எல்லா விலங்குகளிடம் சொல்லிக்கொண்டு அலைகிறது.



முயலிடம் தொடர்ந்து நீ நட்பு வைத்துக்கொண்டால் உன்னை ஏதாவது ஆபத்தில் மாட்டிவிடும்" என்றது நரி. மானிற்கு நரியின் தந்திரம் புரியவில்லை. "அது எப்படி?" என்று கேட்டது. அதற்கு நரியானது, "அதோ தூரத்தில் தெரிகிற குகைக்கு முயல் உன்னை அழைத்துச் சென்று அங்கு வாழும் சிங்கத்திற்கு இரையாக்கிவிடும்" என்று பொய் கூறியது. மானும் நரியின் சூழ்ச்சியைப் புரிந்து கொள்ளாமல் அதனை நம்பி நடுகாட்டிற்குள் சென்றது. தனது நண்பனை வெகுநேரம் ஆகியும் காணவில்லையே என்று முயல் துடிதுடித்தது. காட்டிற்குள் அலைந்து திரிந்து தேட ஆரம்பித்தது. கடைசியில் நரி தந்திரமாக மானை வேட்டையாட அழைத்துச் சென்றதைப் பார்த்துவிட்டது. "நரியாரே! என் நண்பனை எங்கு அழைத்து செல்கிறாய்?" என்று கேட்டது. "இன்றிலிருந்து மான் உன் நண்பன் அல்ல. மான் என் நண்பன்" என்று நரி பதில் கூறியது "மானை விட்டுவிடு!" என்று கதறியது முயல். அப்படியானால் என் மூன்று புதிர்களுக்கு விடைகூறு? பிறகு விட்டுவிடுகிறேன் என்றது. சரி! கூறு என்றது முயல்.



புதிர் 1 : " கீழே வரும் ஆனால் மேலே போகாது?

புதிர் 2 : கைகள் இருக்கும், ஆனால் கைதட்டமுடியாது அது என்ன?

புதிர் 3 : இளமையில் உயரம் முதுமையில் கட்டை அது என்ன?

முயல் நரியிடம் இவ்வளவுதானே! இதோ விடை சொல்கிறேன் என்றது. முதல் புதிருக்கு ' மழை' இரண்டாவதற்கு 'கடிகாரம்' மூன்றாவதற்கு 'மெழுகுவத்தி' என்று சட்டென விடை கூறியதைப் பார்த்து திகைத்து நின்றது நரி. நீ கூறியபடி புதிருக்கு விடை சொல்லிவிட்டேன் என் நண்பனை என்னிடம் அனுப்பி விடு! என்று கேட்டது முயல். நரியும் மானை விடுவித்தது. மான் மகிழ்ச்சியுடன் முயலுடன் ஒன்று சேர்ந்து வாழ்ந்தது. காட்டில் உள்ள மற்ற விலங்குகள் எல்லாம் நரியுடன் நட்பு கொள்வதைத் தவிர்த்தன.

**நீதிக் கருத்து:**

**கூடா நட்பு கேடாய் முடியும்**



## வாங்க பேசலாம்

- உமக்குத் தெரிந்த புதிர் / விடுகதைகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.
- அன்பை மறவா முயல் கதையை உமது சொந்த நடையில் கூறுக.



## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

IHWP8B

1. 'இரை' என்ற சொல்லின் பொருள் ........................................

(அ) உணவு (ஆ) இருப்பிடம்

(இ) மலை (ஈ) இறைவன்

2. 'மகிழ்ச்சியுடன்' – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................................

(அ) மகிழ்ச்சி + யுடன் (ஆ) மகிழ்ச்சி + உடன்

(இ) மகிழ் + உடன் (ஈ) மகிழ்ச் + சியுடன்

3. சொல்லி + கொண்டு – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) சொல்லிக்கொண்டு (ஆ) சொல்கொண்டு

(இ) சொல்லக்கொண்டு (ஈ) சொல்லிகொண்டு

4. 'முதுமை' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ..................................

(அ) தீமை (ஆ) சிறுமை

(இ) பெருமை (ஈ) இளமை

5. 'சூழ்ச்சி' என்ற சொல்லுக்குக் கதையின்படி தொடர்புடைய விலங்கு ..................................

(அ) மான் (ஆ) முயல்

(இ) நரி (ஈ) சிங்கம்

## வினாக்களுக்கு விடையளி

1. முயல் எந்த விலங்குடன் நண்பனாகப் பழகியது?
2. மானை விட்டுவிடுவதற்காக நரி என்ன செய்தது?
3. மான் எதனால் மாட்டிக்கொண்டது?
4. மற்ற விலங்குகள் நரியிடம் நட்பு கொள்வதை ஏன் தவிர்த்தன?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.

1. உணவை எடுத்திடுவாள்
உண்ணாமல் வைத்திடுவாள்
உடல் மெலிந்த பெண்– அவள் யார்?



2. வெள்ளையாம் வெள்ளைக்குடம்
விழுந்தால் சல்லிக்குடம். அது என்ன?



3. கொடிகொடியாம் பூங்கொடியாம்
கிளிதின்னும் பழம் இதுவாம்– அது என்ன?



4. தட்டு தங்க தட்டு
தகதகக்கும் வெள்ளித்தட்டு
தலைக்குமேல் உலாவரும் –அது என்ன?



5. ஆயிரம் அறை கொண்ட
மிகப்பெரிய மிட்டாய் கடை – அது என்ன?



## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்துதல்

1. செல்லலாம் இரைதேடச் புல்வெளியில்

_______________________________________

2. அழைத்துச் நண்பனை செல்கிறாய் எங்கு

_______________________________________

3. கட்டை முதுமையில் உயரம் இளமையில்

_______________________________________

## மொழி விளையாட்டு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒரு குழுவிலிருந்து மாணவர்கள் இருவரை அழைத்து அதில் ஒருவரின் காதில் அவருக்கு மட்டும் கேட்கும்படியாக மெதுவாக ஒரு சொற்றொடரைக் கூறுக. இப்பொழுது அந்த மாணவர், சொல்லப்பட்ட சொற்றொடருக்கு ஏற்றாற்போல் எதிரே உள்ள மற்றொரு மாணவரிடம் நடித்துக்காட்டவேண்டும். அதனை, அந்த மாணவன் கண்டுபிடிக்கவேண்டும். இவ்வாறு தொடர்ந்து விளையாடி மகிழச் செய்க.

**நெடிலைக் குறில் ஆக்குக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கானல் | – | ___________ | 4. தோடு | – | ___________ |
| 2. வாடை | – | ___________ | 5. கோடு | – | ___________ |
| 3. ஆடை | – | ___________ | 6. பால் | – | ___________ |

## மீண்டும் மீண்டும் சொல்லிப்பழகுவோம்

1. விண்ணுக்கும் மண்ணுக்கும் பெண்ணுக்கு கண்ணுக்கும் டண்ணனகரம்

2. உளி கொண்டு சிலையொன்று வடித்தான்.
உலகின் தலைசிறந்த கலையென்று மலைத்தான்.

3. குட்டை மரமும் நெட்டைமரமும் மொட்டைத்தலையை தடவிக்கொண்டன.